**பருத்தித்துறை பிரதேசசபை**

---

**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 10 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பருத்தித்துறை பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

சபையின் பயன்பாட்டிலுள்ள 17 வாகனங்கள் உரிமை மாற்றப்படாது பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்தபோதும் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்படாமையினால் ரூபா 19,892,500 மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.2 பெறவேண்டியவை மற்றும் செலுத்தவேண்டியவை

---

(அ) முற்பணங்கள் ரூபா 41,505 இற்றைவரை தீர்வு செய்யப்படாதுள்ளது.

(ஆ) குறிப்பிட்ட நபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ கொடுக்கப்பட வேண்டிய ரூபா 1,867,713 இற்றை வரை கொடுக்கப்படாது வைப்புக் கணக்குகளில் கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கயுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிகள் அத்தியாயம் II விதி 5 (xii) | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இல. 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பிடிபணங்கள் ரூபா 1,191,468 நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 21,255,713 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் மீண்டு வரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 20,235,917 இருந்தமை நிதி விளைவு ரூபா 1,019,796 அதிகரித்துள்ளமைக்கு வாடகை வருமான, அரசிறை மானிய அதிகரிப்பே காரணமாகும்.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 128,395,174 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 125,534,837 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 2,860,337 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2015 | |
|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| இறைகளும் வரிகளும் | 617 | 84 | 916 |
| குத்தகை வாடகைகள் | 8,032 | 4,996 | 120 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 978 | 1,061 | - |
| ஏனைய வருமானங்கள் | 59,174 | 48,554 | 62,539 |
| **மொத்தம்** | **68,801** | **54,695** | **63,575** |

### 2.3.2 வீதவரிகள்

ஆதன வரி நிலுவையாக ரூபா 916,241 மீளாய்வாண்டில் அறவிடப் பட்டிருக்காததுடன் மீள்மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் உளளூராட்சி ஆணையாளரினால் சனசமூக நிலையங்களுக்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 539,613 உரிய சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படாது நானாவித வைப்பு கணக்குகில் உள்ளது.

### 3.2 செயற்திட்டத் தாமதங்கள்

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,235,000 பெறுமதியான 05 வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைக்குள் திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கபடாமையினால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 38,400 தொடக்கம் ரூபா 14,339,419 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

---

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

---

சபையினால் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

---

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

---

மீளாய்வாண்டில் 11 வாகனங்கள் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

சபையில் பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) வாகனப்பதிவேடு

(ஆ) வைப்புப்பதிவேடு

(ஆ) முற்பணப்பதிவேடு